RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்-83 | 31 மார்ச் | திங்கள்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## ஏப்.6ல் தமிழகம் வரும் பிரதமரை கண்டித்து கருப்புக்கொடி ஆர்ப்பாட்டம்: காங்கிரஸ் அறிவிப்பு



சென்னை, மார்ச்.31

"தமிழகத்துக்கு தர வேண்டிய ரூ.4,034 கோடியை தராமல் கிராமப்புற மக்களின் வாழ்வில் விளையாடுகிறது மத்திய அரசு. இதுபோன்ற காரணங்களால் தமிழகத்துக்கு ஏப்ரல் 6ம் தேதி வருகை தரும், பிரதமர் மோடியை கண்டித்து தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும்." என்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் செல்வப்பெருந்தகை கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: "பிரதமர் மோடி தலைமையிலான பாஜக அரசு பொறுப்பேற்ற திலிருந்தே தமிழகத்தையும், தமிழர்களையும் ஜனநாயக விரோத திட்டங்கள் மூலம் வஞ்சித்து வருகிறது.

இந்தி திணிப்பு, மும்மொழிக் கொள்கை, புயல், வெள்ளம் பாதித்த தமிழகத்தின் மாவட்டங்களுக்கு பேரிடர் நிதி ஒதுக்காதது, தமிழகத்துக்கு பள்ளிக் கல்விக்காக ஒதுக்கிய நிதியை வழங்காமல் இருப்பது, உயிர்கொல்லி நீட் தேர்வால் அன்றாடம் தற்கொலைகள் அதிகரித்து கொண்டுள்ளது, இந்த கொடிய தேர்விலிருந்து தமிழகத்துக்கு விலக்கு அளிக்காதது, மாநில திட்டங்களுக்கு மத்திய நிதி ஒதுக்கீட்டில் பாரபட்சம் காட்டுவது, தமிழகத்திலிருந்து அதிகமான ஜிஎஸ்டி வரி வருவாய் கிடைத்த போதும் நியாயமாக கிடைக்க வேண்டிய நிதியை வழங்காமல் இருப்பது, பாஜக ஆளாத மாநிலங்களில் ஆளுநர்களை வைத்து தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு நெருக்கடியை கொடுப்பது, சென்னை மெட்ரோ 2ம் கட்டத்துக்கான நிதியை தாமதப்படுத்துவது, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தை, மகாத்மா காந்தி அவர்களது பெயரில் இருப்பதால் என்னவோ இத்திட்டதை முடக்க நினைக்கின்றது.

அவ்வகையில் தமிழகத்துக்கு தர வேண்டிய ரூ.4,034 கோடியை தராமல் கிராமப்புற மக்களின் வாழ்வில் விளையாடுகிறது மத்திய அரசு. இதுபோன்ற காரணங்களால் தமிழகத்துக்கு ஏப்ரல் 6ம் தேதி வருகை தரும், பாரத பிரதமர் மோடியை கண்டித்து தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும், மாவட்ட தலைவர்கள் மற்றும் எனது தலைமையில் சென்னையில் கருப்புக் கொடி ஏந்தி கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும்", என்று அவர் கூறியுள்ளார்.

## 660 மெகாவாட் எண்ணூர் அனல் மின்னுற்பத்தி விரிவாக்க திட்டத்தை செயல்படுத்த மின்வாரியம் முடிவு



சென்னை: , மார்ச்.31

அதிகரித்து வரும் மின்தேவையை சமாளிக்க, 660 மெகாவாட் எண்ணூர் அனல் மின்னுற்பத்தி விரிவாக்கத் திட்டத்தை செயல்படுத்த மின்வாரியம் திட்டமிட்டுள்ளது.

இதுகுறித்து, மின்வாரிய அதிகாரிகள் கூறியதாவது: "தமிழகத்தில் ஆண்டுதோறும் 10 சதவீதம் மின்தேவை அதிகரித்து வருகிறது. இதன்படி, அதிகரித்து வரும் மின்தேவையைப் பூர்த்தி செய்ய மின்வாரியம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. தனது சொந்த உற்பத்தியை தவிர, மத்திய தொகுப்பு மற்றும் தனியார் நிறுவனங்களிடம் இருந்து மின்சாரம் மின்சாரம் கொள்முதல் செய்யப்பட்டு வரப்படுகிறது.

எனினும், சொந்த உற்பத்தியை அதிகரிக்க மின் வாரியம் தீவிர நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. இதன்படி, 660 மெகாவாட் எண்ணூர் அனல் மின்னுற்பத்தி விரிவாக்கத் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டம் ஏற்கனவே கடந்த 2014ம் ஆண்டு செயல்படுத்த தனியார் நிறுவனம் ஒன்றுக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டது. ஆனால், அந்த நிறுவனம் பணியை தாமதமாக மேற்கொண்டதால் 2018ம் ஆண்டு ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டது.

பின்னர், எஞ்சிய பணியை மேற்கொள்ள 2022ம் ஆண்டு மற்றொரு நிறுவனத்துக்கு ரூ.4,442 கோடி மதிப்பில் ஒப்பந்தம் வழங்கப்பட்டது. ஆனால், அந்த நிறுவனமும் பணியை தாமதமாக மேற்கொண்டதால், கடந்த ஆண்டு அந்த நிறுவனத்துக்கு வழங்கப்பட்ட ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டது. இந்நிலையில், 660 மெகாவாட் எண்ணூர் அனல் மின்னுற்பத்தி விரிவாக்க திட்டத்தை மின்வாரியமே செயல்படுத்த திட்டமிட்டுள்ளது.

இதற்காக, சாத்தியக் கூறு அறிக்கை தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வரப்படு கிறது. இந்த அறிக்கை தயாரிக் கப்பட்டதும், அடுத்தக் கட்டமாக பணிகள் தொடங்கப்படும். மின்வாரியம் தற்போது சொந்தமாக 4,320 மெகாவாட் அனல் மின்னுற்பத்தியை செய்வ தற்கான உற்பத்தி நிலையத் தைக் கொண்டுள்ளது", என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

## பரந்தூர், ஆவடி மெட்ரோ ரயில் திட்டம் ஆசிய முதலீட்டு வங்கி அதிகாரிகள் ஆய்வு



சென்னை, மார்ச்.31

பரந்தூர், ஆவடி உள்ளிட்ட மெட்ரோ ரயில் திட்டங்களுக்கு நிதியுதவி அளிப்பது குறித்து, ஆசிய முதலீட்டு வங்கி அதிகாரிகள் ஆய்வு செய்தனர். ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கி, சென்னையில் ஏற்கெனவே மெட்ரோ ரயில் 2ம் கட்டம் திட்டத்துக்கு நிதி உதவி செய்துள்ளது.

தற்போது ஆய்வு பணிக்காக அதிகாரிகள் சென்னை வந்துள்ளனர். சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் குழுவுடன் இணைந்து, தாம்பரம் மற்றும் கிளாம்பாக்கம் உள்ளிட்ட பகுதிகளில் பல்வேறு ஒருங்கிணைப்பு மற்றும் தொழில்நுட்ப அம்சங்களை உள்ளடக்கிய முதற்கட்ட ஆய்வுகளை நேற்று மேற்கொண்டனர்.

மேலும், பூந்தமல்லி முதல் பரந்தூர் வரையிலும், கோயம்பேடு முதல் ஆவடி வரையிலும் சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் குழுவுடன் இணைந்து ஆய்வு மேற்கொண்டனர்.

இந்நிகழ்வில், சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் திட்ட இயக்குநர் தி.அர்ச்சுனன், ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் திட்டக் குழு தலைவர் வென்யு கு, நிதியியல் மேலாண்மை சிறப்பு நிபுணர் யி கெங், திட்ட ஆலோசகர் மூஹ்யூன் சோ, சமூக மேம்பாட்டு சிறப்பு நிபுணர் சிவராமகிருஷ்ண சாஸ்திரிஜோஸ்யுலா, சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் தலைமை பொது மேலாளர்கள் ரேகா பிரகாஷ் (திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு), எஸ்.அசோக் குமார், (வழித்தடம் மற்றும் உயர்மட்ட கட்டுமானம்), மற்றும் சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## மியான்மர் பூகம்பம்: 700 முஸ்லிம்கள் உயிரிழப்பு



மியான்மர், மார்ச்.31

மியான்மரில் கடந்த வெள்ளிக்கிழமை ஏற்பட்ட பயங்கர நிலநடுக்கத்தின்போது பல்வேறு மசூதிகளிலும் தொழுகையில் ஈடுபட்டிருந்த 700 முஸ்லிம்கள் உயிரிழந்ததாக தகவல் வெளியாகியுள்ளது. இருப்பினும், இந்த 700 பேரும் ஏற்கெனவே ராணுவ அரசு அதிகாரபூர்வமாக அறிவித்த 1,700+ உயிரிழப்பு கணக்கில் சேர்க்கப்பட்டுள்ளதா இல்லையா என்பது உறுதிப்படுத்தப்படவில்லை.

மியான்மரில் கடந்த 28ம் தேதி பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவில் 7.7 புள்ளிகளாக பதிவான நிலநடுக்கத்தால், மண்டாலே நகரில் பல கட்டிடங்கள் இடிந்தன. அங்கு நிலவும் ராணுவ ஆட்சியால் போதிய வசதிகள் இல்லாமல் மீட்புப் பணி சுணக்கம் கண்டுள்ளது.

இந்நிலையில், கடந்த வெள்ளிக்கிழமை ஏற்பட்ட பயங்கர நிலநடுக்கத்தின்போது பல்வேறு மசூதிகளிலும் ரமலான் நோன்பை ஒட்டி தொழுகையில் ஈடுபட்டிருந்த 700 முஸ்லிம்கள் உயிரிழந்ததாக மியான்மர் 'ஸ்பிரிங் ரெவல்யூஷன் முஸ்லிம் நெட்வொர்க்' என்ற அமைப்பு தெரிவித்துள்ளது. இருப்பினும், இந்த 700 பேரும் ஏற்கெனவே ராணுவ அரசு அதிகாரபூர்வமாக அறிவித்த 1700+ உயிரிழப்பு கணக்கில் சேர்க்கப்பட்டுள்ளதா இல்லையா என்பது உறுதிப்படுத்தப்படவில்லை. அரசு செய்தித் தொடர்பாளர் மேஜர் ஜெனரல் ஜாவ் மின் டுன் அரசுத் தொலைக்காட்சிக்கு அளித்தப் பேட்டியில், "இதுவரை 1,644 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. 3,400 பேர் காயமடைந்துள்ளனர். 300 பேரைக் காணவில்லை." என்றார்.

இதற்கிடையில், மியான்மரில் ஆளும் ராணுவத் தலைமை ஒரு வார காலம் தேசிய துக்க காலமாக அனுசரிக்கப்படும் என அறிவித்துள்ளது.

மியான்மரின் மீட்பு, நிவாரணப் பணிகளுக்காக 8 மில்லியன் டாலர் (6.2 மில்லிடன் யூரோ) நிதி தேவைப்படும் என்று கணித்துள்ள ஐ.நா., உலக நாடுகள் தாராளமாக உதவக் கோரியுள்ளது. ஏற்கெனவே உள்நாட்டுப் போரில் சிக்கியுள்ள மியான்மர் தற்போது நிலநடுக்கத்தால் மனிதாபிமான நெருக்கடியில் இருக்கிறது. மருத்துவமனைகள் போதிய அளவில் இல்லாமல் தெருக்களில் சிகிச்சைகள் நடைபெறுவதும், சடலங்களில் இருந்து வீசும் துர்நாற்றமும் சுகாதார நெருக்கடியையும் ஏற்படுத்தியுள்ளது.

இத்தனை துயரங்களுக்கு இடையில், மியான்மரின் ராணுவ அரசு, அந்நாட்டின் கிளர்ச்சிப் படைகள் மீது வான்வழித் தாக்குதலை தொடர்ந்து வருகிறது கவனிக்கத்தக்கது.

மியான்மரில் கடந்த 28ம் தேதி பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவில் 7.7 புள்ளிகளாக பதிவான நிலநடுக்கத்தால், மண்டாலே நகரில் பல கட்டிடங்கள் இடிந்தன. மியான்மரில் தற்போது ராணுவ ஆட்சி நடைபெற்று வரும் நிலையில், கட்டிட இடிபாடுகளை அகற்றுவதற்கு அங்கு போதிய வசதிகள் இல்லை. இதனால் உள்ளூர் மக்கள் கைகளால் இடிபாடுகளை அகற்றி உள்ளே யாரும் சிக்கியுள்ளனரா என தேடி வருகின்றனர். இதனிடையே, இந்தியா மற்றும் சீனாவில் இருந்து சென்றுள்ள மீட்பு குழுவினர் ஒரு சில இடங்களில் மீட்பு பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

நிலநடுக்கம் ஏற்பட்டு இரு தினங்களுக்கு மேல் ஆவதால் கட்டிட இடிபாடுகளுக்குள் பிணவாடை வீசுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. கட்டிட இடிபாடுகளில் சிக்கி காயம் அடைந்தோர் மியான்மர் மருத்துவமனையில் அதிகளவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதனால், அங்கு மருந்து பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. நிலநடுக்கத்தால் வீடுகளை இழந்த மக்கள் தெருக்களில் தங்கியுள்ளனர். அவர்கள் உணவு மற்றும் சுத்தமான குடிநீர் கிடைக்காமல் போராடி வருகின்றனர். இணைய சேவை மற்றும் போன் சேவைகளும் துண்டிக்கப்பட்டுள்ளதால் நிவாரண பணிகளை மேற்கொள் வதில் தடைகள் ஏற்பட்டுள்ளன.

4 பேர் உயிருடன் மீட்பு: மண்டாலே நகரில் ஸ்கை வில்லா குடியிருப்பில் கட்டிட இடிபாடுகளில் சிக்கியிருந்த ஒரு கர்ப்பிணிப் பெண் உள்பட 4 பேர் மீட்கப்பட்டுள்ளதாகத் தகவல் வந்துள்ளது. மியான்மர் நிலநடுக்க மீட்புப் பணிகளில் இந்தியா, சீனா உள்ளிட்ட நாடுகள் உதவி வருகின்றனர். இந்நிலையில் மண்டாலேவில் நடந்த மீட்புப் பணியில் சீன குழுவினர் ஒரு கர்ப்பிணிப் பெண், ஒரு குழந்தை உள்பட 4 பேரை உயிருடன் மீட்டுள்ளதாக சீன தேசிய ஊடகமான சினுவா செய்தி வெளியிட்டுள்ளது.

தாய்லாந்து நிலவரம்: மியான்மர் நிலவரம் இப்படியென்றால் தாய்லாந்தில் இதுவரை 19 உயிரிழப்புகளை அரசு அதிகாரபூர்வமாக உறுதிப்படுத்தியுள்ளது. தலைநகர் பாங்காக்கில் அடுக்குமாடி கட்டிடத்தின் கீழ் சிக்கியுள்ள 75 பணியாளர்களை மீட்கும் பணியும் நடந்து வருகிறது. பாங்காக் ஆளுநர், கட்டிடத்தின் கீழ் கட்டுமானப் பணியாளர்கள் இன்னும் உயி ருடன் இருக்க வாய்ப்புள்ளதாக நம்புவதாகக் கூறியுள்ளார்.

## "முல்லைப் பெரியாறு அணைக்கு எதிரான 'எம்புரான்' காட்சிகளை நீக்குக" வேல்முருகன்





சென்னை, மார்ச்.31

'எம்புரான்' திரைப்படத்தில் முல்லைப் பெரியாறு அணை குறித்து அவதூறான கருத்து தெரிவிக்கும் வகையில் சர்ச்சைக்குரிய வசனங்களை நீக்க வேண்டும். தொடர்ந்து அறிவார்ந்த தமிழ்ச் சமூகத்தை கொச்சைப்படுத்தி வரும் போக்கை மலையாள திரையுலகம் கைவிட வேண்டும் என தமிழர் வாழ்வுரிமைக் கூட்டமைப்புத் தலைவர் வேல்முருகன் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், "நாகர்கோவில், தென்காசி, கம்பம், போடி, பொள்ளாச்சி, கோவை என தெற்கில் இருந்து வடக்கு வரை கணிசமாக தமிழ் நிலத்துடன் தொழில், சுற்றுலா ரீதியில் கேரள மாநிலம் தொடர்பில் இருக்கிறது. இந்த எல்லைப் பகுதிகளில் இரு மாநில மக்களுக்கும் இடையே நல்ல உறவு இருக்கிறது. உயர் கல்விக்காகவும், வேலைக்காகவும், மலையாளிகள் இடம் பெயரும் மாநிலமாக தமிழ்நாடு இருக்கிறது. இப்படி சகோதரத்துடன் தமிழர்களும், கணிசமான மலையாளிகளும் இருந்து வரும் நிலையில், மலையாள திரைப்படங்களில் தொடர்ந்து தமிழர்களை கொச்சைப்படுத்தி வருவது என்பது கடும் கண்டனத்துக்குரியது.

மலையாள இயக்குநர்கள், நடிகர்கள், துணை நடிகர்கள், தொழில்நுட்பக் கலைஞர்கள் என பலரும், சென்னையில் திரைப்பட தொழிலை கற்றுக் கொண்டு, அவர்களின் சொந்த மாநிலத்துக்கு வண்டி ஏறும்போது, கூடவே தமிழின வெறுப்பையும் சுமந்துக் கொண்டே செல்கின்றனர். இதன் காரணமாகவே, அவர்கள் பணியாற்றக்கூடிய மலையாள திரைப்படங்களில் தமிழின வெறுப்பை உமிழ்ந்து வருகின்றனர்.

மலையாள இயக்குநர் ராஜீவ் மேனன் இயக்கிய 'கண்டுகொண்டேன் கண்டுகொண்டேன்' காதல் திரைப்படத்தில், இலங்கை அமைதிப்படையை ஆதரித்தும், ஈழப் போராளிகளை கொச்சைப்படுத்தும் காட்சி சம்மந்தமே இல்லாமல் திணிக்கப்பட்டிருந்தது. தென் தமிழக விவசாயிகளின் சோற்றில் மண்ணை போடும் விதமாக "முல்லைப் பெரியாறு அணையை உடைக்க வேண்டும்" என்கிற பிரச்சாரத்தை வலியுறுத்தி சோஹன் ராய் என்ற மலையாளி 'டேம் 999' என்ற திரைப்படத்தை இயக்கியிருந்தார்.

தமிழர்களை கொச்சைப்படுத்தி எடுக்கப்பட்ட மலையாள இயக்குநர் சந்தோஷ் சிவன் இயக்கிய 'இனம்', ஈழத்தில் தமிழர்கள் இன அழிப்பை நியாயப்படுத்திய 'மெட்ராஸ் கபே' உள்ளிட்ட பல்வேறு திரைப்படங்கள் சான்றாக இருக்கிறது. இந்தத் திரைப்படங்களின் வரிசையில், கேரளாவின் பிரபல நடிகர் மோகன்லால் நடிப்பில் சமீபத்தில் வெளியான 'எம்புரான்' திரைப்படத்தில், முல்லைப் பெரியாறு அணை குறித்து அவதூறான கருத்து தெரிவிக்கும் வகையில் சர்ச்சைக்குரிய வசனங்கள் இடம் பெற்றிருக்கிறது.

இந்தத் திரைப்படத்தின் இயக்குநர் நடிகர் பிருதிவிராஜ், படத்துக்கும் அதன் போக்கிற்கும் தொடர்பே இல்லாமல், முல்லைப்பெரியாறு அணைக்கு எதிராக வன்மத்தை காட்டி யிருப்பது வன்மையாக கண்டிக்கதக்கது.

குறிப்பாக, நெடும்பள்ளி டேம் என்று மாற்று பெயரிட்டு, பிரிட்டிஷ் சாம்ராஜ் யத்திற்குள் அடங்கி இருந்த திருவிதாங்கூர் ராஜா, 999 வருடங்களுக்கு இனாமாக எழுதிக் கொடுத்தாராம். எழுதி வாங்கிய பிரிட்டிஷ்காரன் போய்விட்டானாம். மன்னராட்சியும் போய் விட்டதாம். ஆனாலும், அந்த ஆபத்து மக்களை காவு வாங்க காத்து நிற்பதாக நடிகை மஞ்சு வாரியர் பேசும் வசனம் தமிழின காழ்ப்புணர்ச்சியின் உச்சம்.

மேலும், இரண்டு ஷட்டரை திறந்தாலே, மக்கள பலிவாங்குற அணையை, அதாவது முல்லைப் பெரியாறு அணையை, குண்டு வைத்து தகர்த்தால், கேரளம் மறுபடியும் தண்ணீருக்குள் மூழ்கும். அணையை காப்பாற்ற செக் டேம் எனும் சுவர்களால் பயனில்லை. அணையே இல்லாமல் இருந்தால் தான் சரி என்பன போன்ற வசனங்களும் படத்தில் இடம்பெறுகின்றன.

தமிழின வெறுப்பை உமிழும் இதுபோன்ற திரைப்படங்கள், தமிழ்நாடு, கேரள மாநில மக்களிடையே நீடித்து வரும் நல்லுறவை சீர்குழைத்து, இருமாநில உறவை கெடுக்கும்.

எனவே, 'எம்புரான்' திரைப்படத்தில், முல்லைப் பெரியாறு அணை குறித்து அவதூறான கருத்து தெரிவிக்கும் வகையில் சர்ச்சைக்குரிய வசனங்களை நீக்க வேண்டும். தொடர்ந்து அறிவார்ந்த தமிழ்ச் சமூகத்தை கொச்சைப்படுத்தி வரும் போக்கை மலையாள திரையுலகம் கைவிட வேண்டும் என தமிழர் வாழ்வுரிமைக் கூட்டமைப்பு சார்பில் எச்சரிக்கை விடுக்கிறேன்" என்று அவர் கூறியுள்ளார்.

# தேவகோட்டை ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை கல்லூரியில் 54 ஆம் ஆண்டு கல்லூரி நாள் விழா





தேவகோட்டைமார்ச் 31

சிவகங்கை மாவட்டம்தேவகோட்டை ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை கல்லூரியில் 54 ஆம் ஆண்டு கல்லூரி நாள் விழா நடைபெற்றது. இவ்விழாவைக் கல்லூரித் தலைவர் அண. லெட்சுமணன் செட்டியார் தலைமையேற்றுத் தொடங்கி வைத்தார். அவர்தம் தலைமையுரையில் கல்வி வள்ளல் அண்ணாமலை செட்டியார் தொலைநோக்குப் பார்வையுடன் உருவாக்கிய இக்கல்லூரி 54ஆவது ஆண்டு விழாவைச் சிறப்பாக கொண்டாடும் இவ்வேளையில் இங்கு பயிலும் மாணவர்கள் அனைவரும் உயர்ந்த நோக்கத்தை உடையவர்களாகத் தங்களை மாற்றிக் கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். மேலும் இந்த ஆண்டு பல்கலைக்கழக அளவில் தரச் சான்றிதழ் பெற்றுள்ள நான்கு மாணவிகளுக்கு தனது சொந்த அறக்கட்டளையான லெட்சுமி ஆச்சி அறக்கட்டளையிலிருந்து மேல்நிலைக் கல்விக்கான உதவிகள் செய்யப்படும் எனவும் அறிவித்தார். விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட புதுக்கோட்டை தமிழ்ச் சங்கத்தின் தலைவர் கவிஞர் தங்கம் மூர்த்தி சிறப்புரையாற்றினார். அவர்தம் சிறப்புரையில் எல்லா உயிர்களும் ஆபத்தோடு வாழும் போது மனிதன் மட்டும்தான் தனக்கான அனைத்து வசதிகளோடும் சுகமாக வாழ்கிறான். அவ்வாறு சுகமாக வாழும் மனிதன் தன் வாழ்க்கைப் பயணத்தில் நாற்பது வயது அடையும் முன்னரே சாதனைகள் படைக்க வேண்டும் என்னும் எண்ணத்தை உருவாக்கிக் கொள்ள வேண்டும் எனவும் பெண் பிள்ளைகளைத் தன் பிள்ளைகள் போல் என்றைக்கு நினைக்கிறோமோ அன்றுதான் நம் இலட்சியம் நிறைவேறும். முடி திருத்த பல்வேறு யோசனைகள் யோசிக்கும். மாணவர்கள் தன் வாழ்வைத் திருத்த ஒரு முறையாவது யோசிக்க வேண்டும் அனைத்திற்கும் கல்வியே அடிப்படை என்பதை அறிந்து கொள்ள வேண்டும் எனப் பேசினார். அதனைத் தொடர்ந்து கல்லூரியின் அனைத்துத் துறைகளிலும் முதல் மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்குப் பாராட்டுச் சான்றிதழ்களும் பரிசுகளும் வழங்கப்பட்டன. மேலும் இந்த ஆண்டு கல்லூரியின் சார்பாக கல்லூரிக்குப் பெருமை சேர்த்த இளங்கலை தமிழ் பயிலும் மூன்றாம் ஆண்டு மாணவி இராஜபாரதிக்கு கல்லூரியின் இளைஞர் நலத்துறை சார்பில் இளம் சாதனையாளர் விருதும். இளங்கலை தமிழ் மூன்றாம் ஆண்டு பயிலும் மாணவி வள்ளிக்கு திருக்குறள் பேரவையின் சார்பில் பத்தாயிரம் ரூபாய் பணப் பரிசும், ஓய்வு பெற்ற தமிழ்த்துறைப் பேராசிரியர் சுந்தரமூர்த்தி வழங்கும் சிறந்த மாணவருக்கான பணப்பரிசு மூவாயிரத்து அறுநூறு ரூபாய் பணப்பரிசும் வழங்கப் பட்டது. இளங்கலை மூன்றாம் ஆண்டு வேதியியல் பயிலும் மாணவன் திலக் அகில இந்திய முதுகலை சேர்க்கை ஒருங்கிணைந்த நுழைவுத் தேர்வில் தேர்ச்சி பெற்றமைக்கு பாராட்டுகள் தெரிவிக்கப்பட்டது. இவ்விழாவில் கல்லூரி முதல்வர் பேராசிரியர் இரா. நாவுக்கரசு ஆண்டறிக்கை வாசித்தார், கல்லூரியின் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் கண்ணதாசன் வரவேற்றார். ஆங்கிலத்துறைத் தலைவர் அருள்சாமி நன்றி கூறினார். தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் முனைவர் இளங்கோ தொகுத்து வழங்கினார். இவ்விழாவில் கல்லூரியின் முன்னாள் முதல்வர்கள் பேராசிரியர் முத்துராமன் பேராசிரியர் இராதாகிருஷ்ணன் முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் ஆறுமுகம், மருத்துவர் செங்கதிர் சிந்தனைச் சோலை நிறுவுநர் தெய்வசிகாமணி புதுக்கோட்டை கவிஞர் மகா சுந்தர் மற்றும் நகர்ப் பிரமுகர்கள், பேராசிரியர்கள், அலுவலர்கள் மற்றும் மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# ஆர் எஸ் மங்கலம் மிளகாய் சந்தையில் குண்டு மிளகாய் வத்தல் குவிண்டாலுக்கு ரூ.5000 வீழ்ச்சி! விவசாயிகள் வேதனை



ஆர்.எஸ்.மங்கலம்.மார்ச்31

இராமநாதபுரம் மாவட்டம் ஆர் எஸ் மங்கலத்தில் நேற்று முன் தினம் மிளகாய் சந்தை நடைபெற்றது இங்கு ஆர்.எஸ். மங்கலம்சுற்று வட்டார பகுதி விவசாயிகள் விற்பனைக்கு கொண்டுவந்த குண்டு மிளகாய் வத்தல் குவிண்டாலுக்கு 5000 ரூபாய் விலை வீழ்ச்சி அடைந்தால் விவசாயிகள் வேதனை அடைந்தனர்.

சுற்று வட்டார பகுதிகளை மையமாக கொண்டு ஆர்.எஸ்.மங்கலத்தில் வாரம் தோறும் மிளகாய் சந்தை நடைபெற்று வருகிறது அந்த வகையில் நேற்று முன் தினம் நடந்த வாரச்சந்தைக்கு 300 குவிண்டால் குண்டு மிளகாய் வத்தல் விற்பனைக்கு வந்திருந்தது

அதனை வெளியூர் வியாபாரிகள் வத்தல்களுக்கு விலை நிர்ணயம் செய்தனர்.

மார்ச் இரண்டாவது வாரத்தில் முதல் தர பெரிய வகை குண்டு வத்தல் மிளகாய் குவிண்டாலுக்கு ரூபாய் 21,500க்கு விற்பனையான நிலையில் நேற்று முன் தினம் ரூபாய் 5000 குறைந்து ரூபாய்16,500க்கு விற்பனையானது இரண்டாம் தர சிரியவகை மிளகாய் வத்தல்

குவிண்டால் ரூபாய் 15,000 விற்பனையான நிலையில் நேற்று முன் தினம் ரூபாய் 1000 குறைந்து ரூபாய் 14,000க்கு விற்பனையானது

கடந்த 15நாட்களில் ரூபாய் 5000 வரை மிளகாய் வத்தல் விலை குறைந்து உள்ளதால் விவசாயிகள் பாதிக்கப்படுவதாக வேதனை அடைந்துள்ளனர் பெரும்பாலான வியாபாரிகள் சிண்டிக்கேட் அமைத்து கொண்டு விலை நிர்ணயம் செய்வதில் போதிய விலை கிடைக்கவில்லை என விவசாயிகள் வேதனை தெரிவித்துள்ளனர்.

# தட்பவெப்பநிலை குறித்து ஆராய்வதற்காக 80 கிராம் எடையில் சிறிய ரக பலூன் மூலம் வானில் பறக்கவிட்டு அசத்திய பெரும்பாக்கம் அரசு பள்ளி மாணவிகள்




பெரும்பாக்கம் மார்ச் 31

சென்னை பெரும்பாக்கத்தில் உள்ள குடிசை மாற்று வாரியத்தில் பெண்கள் முன்னேற்ற அறக்கட்டளை மற்றும் நைடெக் நிறுவனம் இணைந்து பெரும்பாக்கம் அரசு பள்ளி மாணவர்களுக்கு விண்வெளி குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் சிறிய ரக செயற்கைகோள் தயாரிக்கும் பயிற்சி வழங்கப் பட்டது. அதன்படி 50க்கும் மேற்பட்ட மாணவிகள் சுமார் 40 நேரத்தில் 2 சிறிய ரக செயற்கைகோளை தாயரித்து அசத்தி உள்ளனர். சுற்றுசூழல் மற்றும் காலநிலை மாற்றத்தை கண்காணிக்க தயாரிக்கப்பட்ட இந்த சிறியரக செயற்கொளுக்கு விண்வெளியில் இருந்து பூமிக்கு திரும்பிய சுனிதா வில்லியம் பெயர் சூட்டப்பட்டது.

அரசு பள்ளி மாணவர்கள் தயாரித்த 80 கிராம் எடை கொண்ட இந்த சிறிய செயற்கோளை பெரும்பாக்கம் குடிசை மாற்றுவாரிய குடியிருப்பில் இருந்து பலூன் மற்றும் பாராசூட் மூலம் வானில் பறக்கவிட்டு தட்பவெப்பநிலை, காலநிலையை கணினி மூலம் மாணவர்கள் கண்கானித்தனர்.

வெற்றி கரமாக வானில் பறந்த இந்த சிறிய செயற்கைகோளை தயாரித்த மாணவர்களுக்கு சான்றிதழ் மற்றும் பதக்கம் வழங்கி கவுரவிக்கப்பட்டனர்.

பெரும்பாக்கம் போன்ற குடிசைமாற்று வாரியத்தில் உள்ள ஏழ்மையான குழந்தைகளும் விண்வெளி குறித்து ஆராய்ச்சியாளர்களாக உருவாக்கும் வகையில் இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தாக பெண்கள் முன்னேற்ற அறக்கட்டளை நிறுவனர் திய்வா தெரிவித்தார்.

# புனித தோமையார் மலை வடக்கு ஒன்றிய திமுக சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்



தாம்பரம், மார்ச்.31

தாம்பரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, புனித தோமையார் மலை வடக்கு ஒன்றிய திமுக சார்பில், முடிச்சூர் ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக (விநிழிஸிணிநிகி 100 நாள்) வேலை உறுதி திட்ட நிதி ரூ.4034/ கோடியை வழங்காமல் தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும் ஒன்றிய பாஜக அரசை கண்டித்து ஒன்றிய துணை செயலாளர் அ.விநாயகமூர்த்தி தலைமையில் நடைபெற்ற மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் தாம்பரம் மாநகர செயலாளர் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். ராஜா கலந்து கொண்டு கண்டன உரையாற்றினார். இந்நிகழ்வில் பொதுக்குழு உறுப்பினர் ஆர்.எஸ்.சங்கர், ஊராட்சி மன்ற தலைவர்கள் சி.கே.ஜெகதீஸ்வரன், ஜனனிசுரேஷ்பாபு, ஊராட்சி மன்ற துணை தலைவர் டி.புருஷோத்தமன், ஒன்றிய நிர்வாகிகள் எம்.சக்தி, மஞ்சுஜெயபாலன், முடிச்சூர் சாலமன், கிளை கழக செயலாளர்கள், ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், ஒன்றிய அணிகளின் நிர்வாகிகள், கிளை கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்றனர்.

# காட்டாங்குளத்தூர் வடக்கு ஒன்றிய சார்பில் ஒன்றிய அரசை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்




காட்டாங்குளத்தூர் மார்ச்.31

ஒன்றிய அரசைக் கண்டித்து திமுக கண்டன ஆர்ப்பாட்டம் 100 நாள் வேலைத்திட்டத்தில் தமிழ்நாட்டுக்கு தர வேண்டிய ரூ.4,034 கோடி நிதியை வழங்காத ஒன்றிய பாஜக அரசைக் கண்டித்து திமுக சார்பில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.மோ.அன்பரசன் அவர்களின் ஆணைக்கினங்க

காஞ்சி நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன் ஆகியோரின் வழிகாட்டுதலின்படிகாட்டாங்கொளத்தூர் வடக்கு ஒன்றியத்தில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது

இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தின் தலைமை மாவட்ட துணை செயலாளர் து.மூர்த்தி, காட்டாங்குளத்தூர் வடக்கு ஒன்றிய பொறுப்பாளர் எம்.டி.லோகநாதன்,

வரவேற்புரை ஊரப்பாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் பவானி கார்த்திக், முன்னிலை ஒன்றிய பொறுப்புக் குழு உறுப்பினர்கள் டி.குணா, ஸ்ரீகாந்த், பொன்னுசாமி, பத்மநாபன் ஊராட்சி மன்ற தலைவர்கள் கெஜலட்சுமி சண்முகம், நளினி ஜெகன், ஊராட்சி மன்ற துணைத் தலைவர்கள் ரேகா கார்த்திக், சுமதி லோகநாதன், கவிதா சத்தியநாராயணன், வினோதினி ஞானசேகர் மாவட்ட பொறுப்பாளர்கள் ஜான் தினகரன், கண்ணன், ஜெகன், தமிழ்ச்செல்வன், மெய்யழகன், சத்தியநாராயணன்,

தீபன், மாணிக்கம், மகாலட்சுமி, குலசேகரன் ஒன்றிக்குழு உறுப்பினர்கள் தமிழ்ச்செல்வி, மோகனா, சோமசுந்தரம், மலை ராஜா, தினேஷ், ஒன்றிய நிர்வாகிகள் விஜயகுமார், கார்த்திகேயன், ராஜா, பார்த்திபன் இறுதியில் நன்றி உரையாற்றிய ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் எம்எஸ். கார்த்திக் மற்றும் ஊராட்சி கிளை கழக செயலாளர் ஒன்றிய அணிகளின் அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்..

## பழனியில் தவெக சார்பாக இரமலான் திருவிழாவை முன்னிட்டு பரிசு பொருட்கள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா



பழனி மார்ச் 31

திண்டுக்கல் மாவட்டம் பழனி மதீனா நகர் பகுதியில் புனித ரமலான் திருவிழாவை முன்னிட்டு தமிழக வெற்றி கழகம் சார்பாக இஸ்லாமியர்களுக்கு ரமலான் பரிசுப் பொருட்கள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நிகழ்ச்சி நடைபெற்றன.

இந்நிகழ்வில் சிறப்பு அழைப்பாளர்களாக மாவட்ட செயலாளர் கார்த்திக் ராஜன், மாவட்ட இணை செயலாளர் விஜய் சிவா, மேற்கு மாவட்ட செயற்குழு உறுப்பினர் பழனிபாலன் மற்றும் விழாவில் முகமது இக்பால், கோழி சித்திக், முகமது இத்ரீஸ், அபுதாகிர், ஆசாத், சாந்துமுகமது, கார்த்திகேயன், வலசுதுரை, லட்சுமி காந்தன் உள்ளிட்ட நிர்வாகிகள் மற்றும் தொண்டரணி வர்த்தக அணி நிர்வாகிகள் கலந்து கொண்டு 300 இஸ்லாமிய சகோதர சகோதரிகளுக்கு ரமலான் பரிசுப் பொருட்களை வழங்கினர்.

தொடர்ந்து இந்நிகழ்வில் தமிழக வெற்றி கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் சமூக ஆர்வலர்கள் என அனைவரும் திரளாக கலந்து கொண்டு ரமலான் வாழ்த்துக்களை ஒருவரை ஒருவர் தெரிவித்துக் கொண்டு விழா நிகழ்ச்சி நடைபெற்றன..




சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே உள்ள முத்தனேந்தலில் திமுக கிழக்கு ஒன்றியம் சார்பில் தமிழகத்திற்கு வழங்க வேண்டிய நிதியை வழங்காமல் தமிழகத்தை சரிவு பாதையில் கொண்டு செல்லும் மத்திய அரசு மற்றும் பாரதிய ஜனதா கட்சியினை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நேற்று நடைபெற்றது.இந்த நிகழ்வில் மானாமதுரை நகர் செயலாளர் பொன்னுச்சாமி, கிழக்கு ஒன்றிய செயலாளர் துரை ராஜாமணி,மேற்கு ஒன்றிய செயலாளர் அண்ணாதுரை, முன்னாள் ஒன்றிய தலைவர் முத்துச்சாமி,மானாமதுரை நகர் மன்ற தலைவர் மாரியப்பன் கென்னடி மற்றும் திமுக நிர்வாகிகள் உட்பட பலர் பங்கேற்றனர்..



திண்டுக்கல் மாவட்டம் பழனியில் தமிழகத்தில் 100 நாள் வேலை உறுதி திட்டத்தில் மத்திய அரசு தமிழகத்திற்கு 4000 கோடி ரூபாய் தரவேண்டியுள்ளது என தமிழக அரசு தெரிவித்து உள்ளது. இந்தநிதியை வழங்காமல் தமிழ்நாட்டை மத்திய பாஜக அரசு வஞ்சிப்பதாகக்கூளி தமிழகம் முழுவதும் திமுக சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதன்படி பழனி அருகே சிவகிரிப்பேட்டை ஊராட்சியில் பழனி சட்டமன்ற உறுப்பினர் ஐ பி செந்தில்குமார் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது கண்டித்து பழனியில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் 100 நாள் வேலைத்திட்ட பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்துகொண்டு உடனடியாக நிதியை தமிழ்நாட்டுக்கு விடுவிக்க கோரி ஆர்ப்பாட்டம் செய்தனர்..



மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தின் (எம்ஜிஎன்ஆர்இஜிஏ MGN-REGA) மூலம் தமிழ்நாட்டுக்கு தரவேண்டிய ரூ. 4,034 கோடி நிதியை வழங்காமல் இருக்கும் மத்திய அரசைக் கண்டித்து தமிழகம் முழுவதும் திமுக சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நேற்று நடைபெற்றது.அவ்வகையில் சிவகங்கை மாவட்டம் இளையான்குடியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சுப.மதியரசன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்நிகழ்வில் இளையான்குடி திமுக நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்

## சென்னை தெற்கு மாவட்டம், புனித தோமையார் மலை ஒன்றியம் திமுக சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்





மேடவாக்கம் மார்ச்31

சென்னை தெற்கு மாவட்டம், புனித தோமையார் மலை ஒன்றியம், மேடவாக்கம் ஊராட்சி அருகில் அமைந்துள்ள ஜெயச்சந்திரன் டெக்ஸ்டைல்ஸ் அருகில் 29.03.25.காலை 10 மணிக்கு தமிழ்நாடு முழுவதும் திமுக சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம், புனித தோமையார் மலை தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர், கோவிலம்பாக்கம், ஜி. வெங்கடேசன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் நடைபெற்றது. சென்னை தெற்கு மாவட்ட கழகச் செயலாளர், மருத்துவ மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சருமான , மா.சுப்ரமணியன் அவர்களின் தலைமையில் தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர், தமிழச்சி தங்கபாண்டியன் மற்றும் சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர், எஸ். அரவிந்த்ரமேஷ் முன்னிலையில் 100 நாள் வேலை உறுதி திட்ட நிதி ரூ.4000 கோடியை தமிழ்நாட்டிற்கு தராமல் ஏழை எளியோரை வயிற்றில் அடிக்கும் மோடி அரசை கண்டித்து தமிழ்நாடு முழுவதும் திமுக சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் ஒன்றிய அரசுக்கு எதிராக அனைவரும் உறுதிமொழி ஏற்று கொண்டனர். ஆர்ப்பாட்டத்தில் மாவட்டத் துணைச் செயலாளர், மனோகரன், அவைத்தலைவர், குணசேகரன், தலைமை பொதுக்குழு உறுப்பினர், மேடவாக்கம் ரவி, தலைமை பொது குழு உறுப்பினர், அரிகிருஷ்ணன், 14வது மண்டல குழு தலைவர், ரவிச்சந்திரன், ஒன்றிய பெருந்தலைவர் சங்கீதா பாரதிராஜன், மாவட்டத் துணைச் செயலாளர், வாசுகி பாண்டியன், மாவட்ட கவுன்சிலர், வேதகிரி, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் பாண்டியன், தியாகராஜன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் சதீஷ், சித்தாலப்பாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் ரவி, 2 வது வார்டு உறுப்பினர், எச்.டி. போஸ், துணைத் தலைவர் கோபு, 5வது வார்டு உறுப்பினர், சொக்கலிங்கம், வேங்கை வாசல் ஊராட்சி மன்ற தலைவர், ஜெயச்சந்திரன், எம்.பி.மூர்த்தி, நன்மங்கலம் ஊராட்சி துணைத் தலைவர், கார்த்திகேயன், ஒட்டியம்பாக்கம் ஊராட்சி துணைத் தலைவர், லோகிதாஸ், மனோநிதி உள்ளிட்ட தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட, பகுதி ,ஒன்றிய, ஊராட்சி, கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டனர். மாற்றுத்திறனாளி ராம்குமார் மற்றும் அவருடைய மாற்றுத்திறனாளி நண்பர்கள் வெயிலையும் பொருட்படுத்தாமல் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்களை அமைச்சர் வெகுவாகப் பாராட்டினார் என்பது குறிப்பிடத்தக்கது.

## திருப்பாச்சேத்தி அருகே சாலையில் டயர் வெடித்ததில் சிக்கிய ரேசன் அரிசி மூட்டைகள்








சிவகங்கை மார்ச் 31

சிவகங்கை மாவட்டம் திருப்பாச்சேத்தி மாரநாட்டுப் பள்ளம் அருகே மார்ச் 28 ஆம் தேதி மாலை ராமேஸ்வரம் மதுரை தேசிய நெடுஞ் சாலையில் ஜிழி37ஙிகீ6783 என்ற பதிவு எண் கொண்ட வாகனத்தில் டயர் வெடித்ததால் தானாக விபத்துக்குள்ளானது. அவ்வழியே சென்றவர்கள் விபத்துக்குள்ளான வாகனத்தை அருகில் சென்று பார்த்த போது அந்த வாகனத்தில் 35 மூட்டைகள் பிடிஎஸ் அரிசி இருந்தது தெரிய வரவே உடனடியாக குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுப் பிரிவு காவல்துறையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது அங்கு வந்த குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுப் பிரிவு ஆய்வாளர் தேபாகர் தலைமையிலான காவலர்கள் கவிழ்ந்து வாகனத்தில் சோதனை செய்ததில் செய்ததில் 45 கிலோ எடையும், மொத்தம் 1575 கிலோ வேகவைத்த றிஞிஷி அரிசியும் இருந்தது. வாகனமும் அரிசியும் எஸ்ஓசியில் கைப்பற்றப்பட்டுள்ளன.மேலும் காவல்துறையினர் விசாரணையில், குற்றவாளிகள் ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி, சோமநாதபுரம், பொதுவாக்குடி, தளுச்சாத்தநல்லூர், மணிநகர் மற்றும் அந்தக்குடி ஆகிய கிராமங்களில் பல்வேறு இடங்களில் பி.டி.எஸ் அரிசியை கருப்புச்சந்தையில் சுய லாப நோக்கத்தோடு விற்பனை செய்வதற்காக சேரிக்கப்பட்டது என்பது தெரிய வந்தது வாகனத்தை இயக்கிய கோவை மாவட்டம் பொள்ளாச்சி சுல்லேஸ்வரன் பேட்டை அண்ணா தெருவை சேர்ந்த சித்தாதித்தன்(44) என்பவரை கைது செய்தனர். சேகரிக்கப்படும் அரிசிகளை பெற முயன்ற திருப்பூர் மாவட்டம் தாராபுரதைத் சேர்ந்த ராஜ்குமார் தப்பி ஓடினார் அவரை காவல் துறையினர் வலை வீசி தேடி வருகின்றனர்.

## சிவகங்கை அருகே கோவில் அறநிலையத்துறை தலைவர் உட்பட 7பேர் மீது கொலை மிரட்டல் வழக்கு

சிவகங்கை, மார்ச்.31

சிவகங்கை மாவட்டம் காளையார் கோயில் வட்டம் கொல்லங்குடி வெட்டுடையார் காளியம்மன் கோவில் அறநிலையத்துறை தலைவர் உட்பட 7பேர் மீது கொலை மிரட்டல் வழக்கு பதியப்பட்டுள்ளது.

காளையார்கோவில் செங்குளிபட்டி கிராமத்தை சேர்ந்த காளிதாஸ் சுவாதி என்ற தம்பதியர் தற்போது சென்னையில் வசித்து வருகின்றர். கடந்த 22.03.2025 அன்று கொல்லங்குடி வெட்டுடையார் காளியம்மன் கோவில் 13 ம் நாள் மண்டகப்படிக்காக வந்துள்ளனர். ஆனால் இவர்களைவ விட்டுவிட்டு வேறொருவர்களை வைத்து மண்டகப்படி நடத்த கோவில் அறநிலையத்துறை தலைவர் கண்ணப்பன் முயற்சித்ததாகவும் அப்போது கேட்க சென்ற காளிதாஸ் சுவாதி தம்பதியினரை தாக்கியதில் காளிதாஸ் என்பவருக்கு அதிக காயங்கள் ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டர். மேலும் இது தொடர்பாக காளிதாஸ் சுவாதி தம்பதியினர் கொடுத்த புகாரின் அடிப்படையில். இவர்களை இரும்புராடு மற்றும் கட்கைளை கொண்டு தாக்கி ஆபாச வார்தைகளால் திட்டடிய கோவில் அறநிலையத்துறை தலைவர் கண்ணப்பன், சிதம்பரம் மகன் உடையார் மகன் இளையபெருமாள் கருப்வீபாயா மகன் லட்சுமணன் மல்லிகா மகன் அஜித் கருப்பையா மகன் காளிமுத்தன்(சிவகங்கை நகர் பகுதி மின்பாதை ஆய்வாளர்) ஆகிய உட்பட 7 பேர் மீது பல்வேறு பிரிவுகளின்படி வழக்குப்பதிவு செய்து காளையார்கோவில் சார்பு ஆய்வாளர் பன்னீர்செல்வம் விசாரனை நடத்தி வருகின்றார்.





ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள திருவாடி கிராமத்தில் பரமக்குடி அரசு கலைக் கல்லூரியின் சார்பாக நடைபெற்ற ஒய் ஆர்சி நிகழ்ச்சியில் உயர் வேதியியல் துறை சார்பாக கிராம மக்களுக்கு இலவசமாக Height (உயரம்), Weight(எடை),Blood pressure(இரத்த அழுத்தம்),Blood glucose(இரத்த சர்க்கரை) போன்ற பரிசோதனைகள் இலவசமாக பார்க்கப்பட்டது. இதற்கு தலைமையேற்று நடத்திய ஒய் ஆர்சி பொறுப்பாசிரியர் மற்றும் வரலாறு துறையின் பேராசிரியர் மானேதனம், மற்றும் உயிர்வேதியியல் துறையின் பேராசிரியர்கள் மற்றும் மாணவமணவியர்கள் பரிசோதனையில் கலந்துகொண்டனர்.



திருப்பூர் மாவட்டம் காங்கேயம் ஊராட்சி ஒன்றியம் வீரணம்பாளையம் ஊராட்சி சாம்பவலசில் முதலமைச்சரின் கிராம சாலைகள் மேம்பாட்டு திட்டம் மற்றும் நபார்டு திட்டத்தின் பல்வேறு சாலை மேம்பாட்டு பணிகளை தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் துவக்கிவைத்தார்.உடன் ஊரக வளர்ச்சியின் முகமையின் திட்டஇயக்குநர் கோ. மலர்விழி மற்றும் தாராபுரம் வருவாய் கோட்டாச்சியர் ஃபெலிக்ஸ் ராஜா ஆகியோர் உள்ளனர்.

## தேனியில் 100 நாள் வேலை திட்டத்தின் கீழ் சம்பள பணத்தை வழங்காத மத்திய அரசை கண்டித்து திமுகவினர் ஆர்ப்பாட்டம்



தேனி, மார்ச்.31

தேனி மார்ச்.30 தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே சில்வார்பட்டி ஊராட்சி பகுதியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்ட பயனாளிகளுக்கு நிதி வழங்க மறுக்கும் பாஜக ஒன்றிய அரசை கண்டித்து திராவிட முன்னேற்ற கழகத்தின் வடக்கு ஒன்றிய கழகம் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. வடக்கு ஒன்றிய செயலாளர் எல்.எம்.பாண்டியன் தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் பாசிச ஒன்றிய அரசை கண்டித்து பல்வேறு கண்டன கோஷங்களை எழுப்பினர். மேலும் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் கெங்குவார்பட்டி பேரூர் செயலாளர் தமிழன், வடக்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் வழக்கறிஞர் ஸ்டீபன், தேவதானப்பட்டி பேரூர் செயலாளர் திலகர்ராஜா, ஒன்றிய துணைச்செயலாளர் வெங்கடாசலம், விவசாய தொழிலாளர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் எஸ்.டி.பரமசிவம், பொறியாளர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் ராம்ஜி, சில்வார்பட்டி கிளை கழக நிர்வாகிகள் தங்கவேல், மாயன், தெய்வம், நாகராஜ், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் முருகன், பரமசிவம், வளையாபதி மற்றும் திமுக தொண்டர்கள், மகளிரணியினர், 100 நாள் வேலை திட்ட பயனாளிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



திருப்பூர் மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் விவசாய குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் தமிழ் நாடு வேளாண் பல்கலைக் கழக வேளாண்மை மற்றும் தோட்டக்கலை இறுதியாண்டு மாணவ மாணவியர்களுடன் வேளாண் மற்றும் தோட்டக்கலை ஊரக பணி அனுபவம் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் கலந்துரையாடினார்.உடன் வேளாண்மை இணை இயக்குநர் சுந்தரவடிவேலு, மாவட்ட ஆட்சியரின் நேர்முகஉதவியாளர் வேளாண்மை ஷீலா பூசாலட்சுமி ஆகியோர் உள்ளனர்.

## சேலம் கிழக்கு மாவட்ட தெற்கு ஒன்றிய திமுக சார்பில் மத்திய அரசை கண்டித்து இரு வேறு இடங்களில் ஆர்ப்பாட்டம்

சேலம், மார்ச்.31




தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்ட பணியாளர்களுக்கு வாரம் வாரம் வழங்கக்கூடிய ஊதியத்தை கடந்த ஆறு மாதமாக ஊதியம் வழங்கப்படவில்லை, மேலும் தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டப் பணிகள் முடித்து பத்து மாதங்களாகியும் நிதி வழங்கப்படவில்லை. இதனால் தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்ட பணியாளர்களும் ஏழை எளிய மக்களும் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர். மத்திய அரசை கண்டித்து, சேலம் கிழக்கு மாவட்ட தெற்கு ஒன்றிய திமுக சார்பில் சேலத்தை அடுத்துள்ள காரிப்பட்டி தபால் நிலைய முன்பாக கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. சேலம் கிழக்கு மாவட்ட தெற்கு ஒன்றிய திமுக செயலாளர் விஜயகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் சேலம் கிழக்கு மாவட்ட திமுக செயலாளர் எஸ் ஆர் சிவலிங்கம் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு, மத்திய அரசால் தமிழக அரசுக்கு விளைவித்து வரும் துரோகங்கள் குறித்தும் தமிழகத்தை தொடர்ச்சியாக வஞ்சித்து வரும் மத்திய அரசின் போக்கை குறித்து பட்டியலிட்டார்.

அயோத்தியாபட்டணம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள 32 ஊராட்சிகளில் இருந்து தேசியஊரக வேலை வாய்ப்பு திட்ட பணியாளர்கள் மற்றும் திட்டபணிகள் செய்தபணியாளர்கள் திட்ட பணிகளுக்கு செங்கல் சிமெண்ட் ஜல்லி கற்கள் எம் சென்ட் திட்டப்பணிகள் செய்து பணம் வழங்காமல் நிலுவையில் நடைபெற்ற இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் சேலம் கிழக்கு மாவட்ட விவசாய அணியின் துணை அமைப்பாளர் செந்தில்குமார் ஒன்றிய துணை செயலாளர் ஹரி உள்ளிட்ட கட்சியின் முக்கிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

இதே போல சேலம் கிழக்கு மாவட்ட தெற்கு ஒன்றிய திமுக சார்பில் அயோத்தியாபட்டினம் திமுக ஒன்றிய அலுவலகம் முன்பாக நடைபெற்ற ஆர்ப் பாட்டத்திற்கு ஒன்றிய துணை செயலாளர் ஹரி தலைமை தாங்கினார். இந்த ஆர்ப்பாட்டத்தில் ஒன்றிய நிர்வாகிகள் தீன தயாளன் மணி வெங்கடேஷ் குமார் பிரபாகரன் மணி அம்மாள் செந்தில் சகாயராஜ் மாசி நாயக்கன்பட்டி சங்கர் சுந்தர் ராமச்சந்திரன் சரவணன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



மதுரை சரக காவல் துறை துணை தலைவராக முனைவர் அபிநவ் குமார் பொறுப்பேற்றுக் கொண்டார்

## அக்கரைப்பட்டியில் உலக காடுகள் தினத்தையொட்டி விழிப்புணர்வு பேரணி



திண்டுக்கல், மார்ச்.31

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் வட்டம், அக்கரைப்பட்டி கிராமம் உலக காடுகள் தினத்தை முன்னிட்டு கிராமப்புற விவசாயப் பணி அனுபவத் திட்டத்தின் ஒரு பகுதியாக அக்கரைப்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் மாணவர்களுக்கு ஓவியபோட்டி நடத்தப்பட்டு, வெற்றிப்பெற்றவர்களுக்கு சுதா (தலைமை ஆசிரியர் ) மற்றும் மீனாகுமாரி ஆசிரியர் பரிசு வழங்கினார்கள் .மாணவர்களுக்கு "மை பிளேட் ",சீரான ஊட்டச்சத்து மற்றும் ஆரோக்கியமான உணவின் முக்கியத்துவத்தை குறித்து விழிப்புணர்வு வழங்கப்பட்டது. "மை பிளேட் " என்பது நமது அன்றாட உட்கொள்ளும் உணவை பழங்கள்,காய்கறிகள், தானியங்கள் ,புரதச்சத்து மற்றும் பால் பொருட்கள் என ஐந்து வகையாக பிரிக்கும், அவற்றை சரிவிகித முறையில் எடுக்கவேண்டிய அவசியத்தையும் விளக்கினர். மேலும் பள்ளி மாணவர்களுடன் இணைந்துவேளாண்க் கல்லூரி மாணவர்களும் மரக்கன்றுகளை நட்டனர். "மரங்களை காப்போம் , காடுகளை காப்போம்" பற்றி பேரணி நடத்தப்பட்டது.

## மதுரை புறநகர் அதிமுக மேற்கு மாவட்ட பூத் கமிட்டி ஆலோசனைக் கூட்டம்



மதுரை, மார்ச்.31

மதுரை புறநகர் மேற்கு மாவட்டம், செல்லம்பட்டி ஒன்றியத்தில் உள்ள கண்ணனூர் மு.ஆண்டிப்பட்டி கருமாத்தூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் பூத் கமிட்டி ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இதற்கு செல்லம்பட்டி ஒன்றிய கழக செயலாளர் ராஜா தலைமை தாங்கினார்.இதில் சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஆர் பி உதயகுமார் ஆலோசனை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் மகேந்திரன், கே தமிழரசன், மாநில நிர்வாகிகள் தனராஜன்,வெற்றிவேல், ராமகிருஷ்ணன், மாவட்ட பொருளாளர் திருப்பதி, பொதுக்குழு உறுப்பினர் சுதாகரன், மாவட்ட இலக்கிய அணி செயலாளர் செல்லம்பட்டி ரகு ,மாவட்ட இளைஞரணி செயலாளர் காசிமாயன், மாவட்ட மாணவரணி செயலாளர் மகேந்திர பாண்டி , மாவட்ட மீனவரணி செயலாளர் சரவண பாண்டி, மாவட்ட கலை பிரிவு செயலாளர் சிவசக்தி, உசிலை குணசேகரபாண்டியன் உட்பட பலர் கலந்து கொண்டனர்

## வத்தலக்குண்டுவில் புதிய டிரான்ஸ்பாரம் பொருத்தி மின்சார வாரியம் சாதனை



வத்தலக்குண்டு மார்ச்.31

திண்டுக்கல் மாவட்டம் வத்தலக்குண்டுவில் மின்சார டிரான்ஸ்பார்மர் வெடித்து இருளில் மூழ்கிய பகுதியை உடனடியாக சரி செய்து புதிய டிரான்ஸ்பாரம் பொருத்தே மின்சார வாரியம் சாதனை படைத்தது.

வத்தலக்குண்டு மதுரை சாலையில் ராணி மங்கம்மாள் போக்குவரத்து கழகம் எதிர்புறம் திருநகர் செல்லும் சாலையையொட்டி ஒரு டிரான்ஸ்பார்மர் உள்ளது. பழுதடைந்த அந்த ட்ரான்ஸ்பார்மரை வத்தலகுண்டு மின்வாரிய ஊழியர்கள் பாலச்சந்தர், மதுக்குமார் ஆகியோர் பழுது பார்த்துவிட்டு இறங்கினர். அப்போது எதிர்பாரா விதமாக டிரான்ஸ்பார்மர் வெடித்து சிதறி தீப்பிடித்து எரிந்தது. அதில் பாலச்சந்தர் மதுக்குமார் இரண்டு பேரும் காயம் அடைந்து வத்தலகுண்டு அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்நிலையில் வத்தலக்குண்டு மின்வாரிய அலுவலர்கள் உடனடியாக தலையிட்டு அந்த வெடித்து சிதறிய டிரான்ஸ்பார்மிற்கு புதிய டிரான்ஸ்பார் பொருத்தி அப் பகுதியில் உடனடியாக இருளைப் போக்கினர் இதனால் பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் மின்சாரத்துறை அலுவலர்களுக்கு நன்றி தெரிவித்தனர்.

## முதுகுளத்தூரில் ரமலான் பெருநாளை முன்னிட்டு நலத்திட்ட உதவி



முதுகுளத்தூர் மார்ச் 31

முதுகுளத்தூர் தமிழ்நாடு முஸ்லீம் முன்னேற்ற கழக அலுவலகத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் ராமநாதபுரம் மேற்கு மாவட்ட தலைவர் வாவா ராவுத்தர் தலைமை தாங்கினார். நகரத் தலைவர் முகைதீன் அப்துல்காதர் முன்னிலை வகித்தார். இதில் சிறப்பு அழைப்பாளராக பெரிய பள்ளிவாசல் ஜமாத் தலைவர் காதர் முகைதீன் கலந்து கொண்டு ரமலான் பெருநாளை முன்னிட்டு ஏழை மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்த நிகழ்வில் மமக நகர செயலாளர் முகமது காசிம் (மோதி) மற்றும் மமக மாவட்ட துணை செயலாளர் சகாபுதீன், மாவட்ட அணி நிர்வாகிகள் முகமது யாக்கூப், உட்பட பூலாங்கால்,கீழச் சிறுபோது,மேலச்சிறுபோது, பூக்குளம், கடலாடி, அனி குருந்தன், பேரையூர், ஆனையூர், உள்ளிட்ட கிராமங்களைச் சேர்ந்த 250க்கும் மேற்பட்ட கலந்து கொண்டனர்.



தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே சில்வார்பட்டி ஊராட்சி பகுதியில் 100 நாள் வேலை உறுதித்திட்டத்திற்கு நிதி வழங்க மறுக்கும் மத்திய அரசை கண்டித்து திமுக வடக்கு ஒன்றிய கழகம் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. வடக்கு ஒன்றிய செயலாளர் எல்.எம்.பாண்டியன் தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் மத்திய அரசை கண்டித்து பல்வேறு கண்டன கோஷங்களை எழுப்பினர். ஆர்ப்பாட்டத்தில் கெங்குவார்பட்டி பேரூர் செயலாளர் தமிழன், வடக்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் வழக்கறிஞர் ஸ்டீபன், மற்றும் திமுக நிர்வாகிகள், பொதுமக்கள்,100 நாள் வேலை திட்ட பயனாளிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## அலங்காநல்லூர் ஒன்றிய பகுதியில் திமுக சார்பாக ஒன்றிய அரசை கண்டித்து ஆர்ப்பாட்டம்



அலங்காநல்லூர். மார்ச்.31.

மதுரை மாவட்டம் அலங்கா நல்லூர் அருகே உள்ள 15.பி. மேட்டுப்பட்டி வெள்ளையம்பட்டி டி.மேட்டுப்பட்டி தனிச்சியம் ஆகிய கிராமப் பகுதிகளில் திமுக சார்பாக மத்திய அரசை கண்டித்து 100 நாள் வேலையை திட்டத்தில் ஊதியத்தை உடனே விடுவிக்க கோரியும் பல்வேறு கோரிக்கைகளுக்கு செவிசாய்க்காத மத்திய மோடி அரசை கண்டித்து ஆர்ப்பாட்டம் நடந்தது இந்த ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட அவைதலைவர் எம்.ஆர்.எம். பாலசுப்பிரமணியன், தலைமை வகித்தார் ஒன்றிய செயலாளர்கள் தன்ராஜ், பரந்தாமன், முன்னிலை வகித்த னர் இந்த ஆர்ப்பாட்டத்தில் மோடி அரசே மோடி அரசு 100 நாள் வேலை திட்டத்தில் வேலையை மட்டும் வாங்கிக் கொண்டு ஊதியத்தை தரவில்லையே தரவில்லையே தமிழக அரசு தங்களிடம் நிதியை கேட்டு இதுவரையும் கொடுக்கவில்லையே கொடுக்கவில்லையே என்று ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இதில் பொதுக்குழு உறுப்பினர் முத்தையன், பேரூராட்சி தலைவர் ரேணுகா ஈஸ்வரிகோவிந்தராஜ், ஒன்றிய துணைச் செயலாளர்கள் ராஜேந்திரன், அருண்குமார், பொருளாளர் சுந்தர், பேரூராட்சி துணைத் தலைவர் சுவாமிநாதன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் தனுஷ்கோடி, செந்தில்குமார், மாவட்ட துணை அமைப்பாளர்கள் வாவிடமருதூர் கார்த்தி கேயன், பிரதாப் விஜயகுமார், ஒன்றிய அணி அமைப்பாளர்கள் சந்தனகருப்பு, மருது, யோகேஷ், தகவல் தொழில்நுட்ப அணி தவசதீஷ் சிறுபான்மை பிரிவு ரியாஸ்கான், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்..

Printed , published by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161